




dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








Vol: 04 | Issue: 071 | 4 Pages | 10.10.2026 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 04 | இதழ்: 071 | 4 பக்கங்கள் | 10.10.2026 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825




**அஃகி யகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்**
**வெஃகி வெறிய செயின்**

**விளக்கம்:** யாரிடத்திலும் பொருளைக் கவர விரும்பிப் பொருந்தாதவற்றைச் செய்தால், நுட்பமானதாய் விரிவுடையதாய் வளர்ந்த அறிவால் பயன் என்ன?

## இந்திய விமானி ஸ்மித் மச்சாருக்கு நாட்டின் உயரிய விருது: இஸ்ரேல் அறிவிப்பு



இஸ்ரேல், அக். 10

பிளைதுபாய் விமானத்தின் காக்பிட்டில் சக விமானியால் கத்தியால் குத்தப்பட்ட போதும், தனது உயிரை பணையம் வைத்து, விமான பயணிகளை காப்பாற்ற துணிச்சலுடன்செயல்பட்ட இந்திய விமானி கேப்டன் ஸ்மித்மச்சாருக்குஇஸ்ரேல் நாட்டின்உயரியகுடிமக்கள் வீர விருது வழங்கப்பட உள்ளது.இஸ்ரேல் அதிபர் ஐசக் ஹெர்சாக் இதனை அறிவித்துள்ளார். உடல்நலம் தேறிய பிறகு அவருக்கு இந்த விருது வழங்கப்படும்என்றும்அவர்தெரிவித்துள்ளார். இதுகுறித்து இஸ்ரேல்அதிபர் ஐசக் ஹெர்சாக் கூறியதாவது: கேப்டன் ஸ்மித் மச்சாரின் துணிச்சலும் தொழில்முறை திறமையும் மிகப்பெரிய பேரழிவைத் தடுத்துள்ளது. ஸ்மித் மச்சார் உடல்நலம் தேறியதும் இஸ்ரேல் மக்களின் சார்பில் குடிமக்கள் வீரத்திற்கான அதிபர் விருதை வழங்குவதில் பெருமையடைகிறேன்"என்று தெரிவித்துள்ளதுமருத்துவமனையில் சிகிச்சைவிமான கடத்தல் முயற்சியின் போது, ஓமன் துணை விமானியால் தாக்கப்பட்டதில், பலத்த காயமடைந்த கேப்டன் ஸ்மித் மச்சார், ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பிரதமர் நரேந்திர மோடி, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் ஆகியோரும் கேப்டன் ஸ்மித் மச்சாரின் துணிச்சலைப் பாராட்டியுள்ளனர். அமெரிக்க நாடாளுமன்றத்திலும் ஸ்மித் மச்சாரை பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## போலந்து: முன்னாள் மாணவன் பள்ளியில் நடத்திய கொடூர தாக்குதலில் பெண் பணியாளர் பலி



வார்சா, அக். 10

போலந்து நாட்டில் உள்ள தொடக்கப்பள்ளி ஒன்றில், 15 வயது முன்னாள் மாணவர் நடத்திய கொடூர கத்திக்குத்து தாக்குதலில் பெண் துப்புரவு பணியாளர் ஒருவர் உயிரிழந்தார். தடுக்க முயன்ற பள்ளி முதல்வர் உட்பட 2 பேர் படுகாயமடைந்தனர். இச்சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.பள்ளிக்குள் புகுந்த வன்முறைபோலந்தின் லெஸ்சிடோல் நோவினி கிராமத்தில் ஜான் பால் II தொடக்கப்பள்ளி அமைந்துள்ளது. இந்த பள்ளியில் நேற்று (வியாழக்கிழமை) காலை 9 மணியளவில், அந்த பள்ளியின் 15 வயது முன்னாள் மாணவன் ஒருவர், தனது ஹெல்மெட்டில் கேமராவைப் பொருத்திக்கொண்டு, 3 கத்திகளுடன் பள்ளிக்குள் நுழைய முயன்றுள்ளார். தடுத்த பெண் பலிமாணவனை உள்ளே விடாமல் தடுக்க முயன்ற 37 வயது பெண் துப்புரவு பணியாளரை அந்த மாணவன் கத்தியால் ஓங்கி குத்தினார். இதில் அந்த பெண் பலத்த காயமடைந்தார். இதையடுத்து ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் அந்த பெண் பரிதாபமாக உயிரிழந்தார். முதல்வரின் துணிச்சல்பெண் பணியாளரின் அலறல் சத்தத்தைக் கேட்டு ஓடிவந்த பள்ளி முதல்வர் கிருஸ்டோப் ஒச்மான்ஸ்கி மற்றும் மற்றொரு ஆசிரியர் மீதும் அச்சிறுவன் கத்திக்குத்து தாக்குதல் நடத்தினான். இதில் இருவருக்கும் பலத்த காயம் ஏற்பட்டது. இருப்பினும், காயத்தையும் பொருட்படுத்தாமல் பள்ளி முதல்வர் அந்த சிறுவனைதுணிச்சலாகப் போராடி மடக்கிப் பிடித்தார்.விசாரணை தீவிரம்தகவலறிந்து விரைந்து வந்த போலீசார் சிறுவனைக் கைது செய்தனர். தாக்குதலுக்கான காரணம் இன்னும் அறியப்படவில்லை.காயமடைந்தபள்ளிஊழியர்கள்உயிருக்குஆபத்தில்லை என போலந்து உள்துறை அமைச்சகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. போலந்தில் அடுத்தடுத்து பள்ளிகளில் நடக்கும் இத்தகைய தாக்குதல்களால் நாடு முழுவதும் பள்ளிப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

## 11 வயது சிறுவனுக்கு பாலியல் தொல்லை பெண் யூடியூபர் மீது வழக்கு



திருவனந்தபுரம், அக். 10

கேரளாவில் 11 வயது சிறுவனுக்கு பாலியல் தொல்லை அளித்ததாக எழுந்த புகாரின் அடிப்படையில் பிரபல பெண் யூடியூபர் ஒருவர் மீது போக்சோ சட்டத்தின் கீழ் கேரள காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர். பாலியல் வன்கொடுமைபுகார்கேரள மாநிலம் திருச்சூர் பகுதியைச் சேர்ந்தவர் 11 வயது சிறுவன். யூடியூபில் லட்சக்கணக்கானபாலோவர்களைக்கொண்டு,உத்வேகம் அளிக்கும் பேச்சுகளால் கவனம் பெற்ற பெண் யூடியூபர் டாக்டர் நிஷா ரபேல் என்பவர் தனக்கு பாலியல் வன்கொடுமை செய்ததாக இந்த சிறுவன் பெற்றோரிடம் கூறியுள்ளார். இதையடுத்து சிறுவனின் பெற்றோர் நேற்று (வியாழக்கிழமை) மேற்கு திருச்சூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். மருத்துவ பரிசோதனை உறுதிஇதனைத் தொடர்ந்து சிறுவனுக்கு திருச்சூர் அரசுபொதுஆஸ்பத்திரியில்பரிசோதனைமேற்கொள்ளப்பட்டது.முதற்கட்ட மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டதில், பாலியல் ரீதியான பாதிப்புகள் இருப்பது உறுதி செய்யப்பட்டது. உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து, இன்று (வெள்ளிக்கிழமை) பிரபல யூடியூபர் நிஷா ரபேல் மீது போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர். சொத்து தகராறு என நிஷா தரப்பு மறுப்புயூடியூபர் நிஷா ரபேல் மீதான இந்த குற்றச்சாட்டுகளை டாக்டர்நிஷாமுற்றிலும்மறுத்துள்ளார்.அடுக்குமாடி குடியிருப்புதொடர்பான முந்தைய பகை மற்றும் சொத்து விவகாரங்கள் காரணமாகவே, திட்டமிட்டு தன் மீது இந்த தவறான புகார் அளிக்கப்பட்டிருப்பதாக அவர் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. கேரளாவில் பொருளாதாரத் துறை ஆசிரியையாகப் பணியாற்றி, யூடியூப் மூலம் பிரபலமாக இருக்கும் நிஷா ரபேல் மீதான இந்த வழக்கு கேரளாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் குறித்து போலீசார் மேலும் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 18 வீரர்கள், வீராங்கனைகளுக்கு ரூ.8.25 கோடி உயரிய ஊக்கத்தொகை: முதல்வர் விஜய் பாராட்டு



சென்னை, அக். 10

ஜப்பானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் 46 வது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் பதக்கங்கள் வென்று சாதனை படைத்த தமிழ்நாட்டைச் சேர்ந்த 18 வீரர்கள், வீராங்கனைகளுக்கு ரூ.8.25 கோடி உயரிய ஊக்கத்தொகை, தேசிய சப் ஜூனியர் மகளிர் கூடைப்பந்துப் போட்டியில்வெற்றிபெற்றதமிழ்நாட்டு அணியின் 12 வீராங்கனைகளுக்கு ரூ.18 லட்சம் ஊக்கத்தொகை, பாரா ஆசியப் போட்டியில் பங்கேற்கவுள்ள வீரர் மற்றும் வீராங்கனைக்கு ரூ.14 லட்சம் சிறப்பு நிதி உதவி என மொத்தம் ரூ.8.57 கோடி ரூபாய்க்கான காசோலைகளை முதல்அமைச்சர் விஜய் வழங்கிப் பாராட்டினார்.இது தொடர்பாக, தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;தமிழ்நாடு முதல்அமைச்சர் ச. ஜோசப் விஜய் இன்று (8.10.2026) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னையில் நடைபெற்ற பாராட்டு விழாவில், 'Dream Olympics' திட்டத்தைத் தொடங்கி வைத்தார். மேலும், ஜப்பானில் நடைபெற்ற 20வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் சார்பில் பங்கேற்று, பதக்கங்களை வென்று சாதனை படைத்ததமிழ்நாட்டைச்சேர்ந்த 13 வீரர்கள்மற்றும் வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 7 கோடியே 65 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள், உஸ்பெகிஸ்தான் நாட்டில் நடைபெற்ற 46வது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் பதக்கங்கள் வென்ற 5 வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு உயரியஊக்கத்தொகையாக60லட்சம்ரூபாய்க்கான காசோலைகள், 51வது தேசிய சப்ஜூனியர் மகளிர் கூடைப்பந்து போட்டியில் வெற்றிபெற்ற தமிழ்நாட்டு அணியின் 12 வீராங்கனைகளுக்கு ஊக்கத் தொகையாக 18 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள், ஜப்பானில் நடைபெறவுள்ள 5வது பாரா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் சார்பில் பங்கேற்கவுள்ள ஒரு வீரர் மற்றும்ஒருவீராங்கனைக்கு14லட்சம்ரூபாய்க்கான சிறப்பு நிதி உதவிக்கான காசோலைகள் என மொத்தம் 32 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு 8 கோடியே 57 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கிப் பாராட்டினார்.விளையா ட்டுத் துறையில் இந்தியாவிலேயே தலைசிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கிடும் வகையிலும், சர்வதேச மற்றும் தேசிய அளவில் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்குகொண்டு வெற்றிபெறும் வகையிலும், அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் எனப் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.அத்துடன், தமிழ்நாடு அரசின் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகைத் திட்டங்களின் மூலமாகவும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளும் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சிறப்பு நிதியுதவி 7 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு, ஜப்பான் நாட்டில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டிலிருந்து கலந்துகொண்ட 37 வீரர், வீராங்கனைகளுக்கு 2 கோடியே 59 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.மேலும், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்லும் வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை ரூ.50 லட்சத்திலிருந்து ரூ.75 லட்சமாகவும், வெள்ளிப் பதக்கம் வெல்லும் வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.30 லட்சத்திலிருந்து ரூ.50 லட்சமாகவும், வெண்கலப் பதக்கம் வெல்லும் வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.20 லட்சத்திலிருந்து ரூ.30 லட்சமாகவும் உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.ஜப்பான் நாட்டில் நடைபெற்ற 20வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் சார்பில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 37 விளையாட்டு வீரர், வீராங்கனைகள், 11 வகையான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றனர். இதில், 13 வீரர், வீராங்கனைகள் 3 தங்கப் பதக்கங்கள், 3 வெள்ளிப் பதக்கங்கள், 13 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 19 பதக்கங்களை வென்று தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.இதில், தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜ் தங்கம், வெள்ளி, வெண்கலம் என 3 பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டின் முதல் வீராங்கனை என்ற பெருமை பெற்றுள்ளதோடு, தடகளம் மகளிர் 400 மீட்டர் தடை ஓட்டத்தில் 54.75நொடிகளில்கடந்து,இந்தியாவின்புகழ்பெற்ற தடகளவீராங்கனைபி.டி.உஷாவின்42ஆண்டுகால தேசிய சாதனையை முறியடித்து வரலாறும் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் மகளிர் கோல் ஊன்றித் தாண்டுதல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற வீராங்கனை பரணிகா இளங்கோவன், இப்பிரிவில் பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையைப் படைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.'Dream Olympics' திட்டத்தைத் தொடங்கி வைத்தல்தமிழ்நாடு முதல்அமைச்சர், ஆசியப் போட்டிகள் / பாரா ஆசியப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகள் / பாரா காமன்வெல்த் போட்டிகளில் பதக்கம் வெல்லும் அனைத்து வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்வதற்கு உயர்தரப் பயிற்சி பெறுவதற்காகவும், ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தயார்படுத்திக் கொள்வதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ள 'Dream Olympics' திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தில் இடம்பெறும் ஒவ்வொரு வீரர், வீராங்கனைக்கும் ஆண்டொன்றுக்கு 50 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.பதக்கங்களை வென்று சாதனை படைத்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்குதல்ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளில், தடகளம் மகளிர் 4x400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் தங்கப் பதக்கமும், தடகளம் கலப்பு 4x400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கமும், தடகளம் மகளிர் 400மீட்டர்தடைஓட்டத்தில்வெண்கலப்பதக்கமும் வென்ற வீராங்கனை வித்யா ராம்ராஜுக்கு 1 கோடியே 55 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகை;மகளிர் கிரிக்கெட் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய அணியில் இடம்பெற்ற வீராங்கனை கமலினிக்கு 75 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகை;ஆடவர் கிரிக்கெட் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய அணியில் இடம்பெற்ற வீரர் வாஷிங்டன் சுந்தருக்கு 75 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகை;தடகளம் கலப்பு 4x400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கமும், ஆடவர் 4x400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கமும் வென்ற வீரர் விஷாலுக்கு 80 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகை;ஸ்குவாஷ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் வெள்ளிப் பதக்கமும், ஆடவர் அணியில் வெண்கலப் பதக்கமும் வென்ற வீரர் அபய் சிங்குக்கு 80 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகை;ஸ்குவாஷ் கலப்பு இரட்டையர் பிரிவில் வெண்கலப் பதக்கமும், ஸ்குவாஷ் மகளிர் அணிப் பிரிவில் வெண்கலப் பதக்கமும் வென்ற வீராங்கனை ஜோஷ்னா சின்னப்பாக்கு 60 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகை;ஸ்குவாஷ் கலப்பு இரட்டையர் பிரிவில் வெண்கலப் பதக்கமும்,ஸ்குவாஷ்ஆடவர்அணியில் வெண்கலப் பதக்கமும் வென்ற வீரர் வேலவன்செந்தில்குமாருக்கு60லட்சம் ரூபாய்உயரியஊக்கத்தொகை;தடகளம் மகளிர் கோலூன்றித் தாண்டுதல் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற வீராங்கனை பரணிகா இளங்கோவனுக்கு 30 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகை;தடகளம் கலப்பு 4x100 மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கம் வென்ற வீராங்கனை அபிநயா ராஜராஜனுக்கு 30 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகை;தடகளம் ஆடவர் 4x400 மீட்டர் தொடர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற வீரர் ராஜேஷ் ரமேஷுக்கு 30 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகை;ஸ்குவாஷ் மகளிர் அணியில் வெண்கலப் பதக்கம் வென்ற வீராங்கனை ஷமீனா ரியாசுக்கு 30 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகை;பேட்மிண்டன் ஆடவர் அணியில் வெண்கலப் பதக்கம் வென்ற வீரர் ஹரிஹரனுக்கு 30 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகை;படகோட்டப் போட்டி (Sailing) பெண்கள் டிங்கி பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றவீராங்கனைநேத்ராகுமணனுக்கு30லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகை;செஸ் ஒலிம்பியாட் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற பிரக்ஞானந்தா மற்றும் குகேஷ் ஆகியோருக்குத் தலா 15 லட்சம் ரூபாய், வெண்கலப் பதக்கம் வென்றவைஷாலிமற்றும்சவிதாஸ்ரீஆகியோருக்குத் தலா 10 லட்சம் ரூபாய், செஸ் ஒலிம்பியாட் போட்டியின் இந்திய அணித் தலைவர் ஸ்ரீநாத் நாராயணனுக்கு 10 லட்சம் ரூபாய் என மொத்தம் 5 வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு 60 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகை;51வது தேசிய சப் ஜூனியர் மகளிர் கூடைப்பந்துப் போட்டியில் வெற்றிபெற்ற தமிழ்நாட்டு அணியின் 12 வீராங்கனைகளுக்குத் தலா 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 18 லட்சம் ரூபாய்க்கான ஊக்கத்தொகை;பாரா ஆசிய போட்டியில் பங்கேற்கவுள்ளவலுதூக்குதல்வீராங்கனைகஸ்தூரி ராஜாமணி மற்றும் தடகளம் போட்டியில் பங்கேற்கவுள்ள வீரர் சோலைராஜ் தர்மராஜ் ஆகியோருக்குத்தலா7லட்சம்ரூபாய்எனமொத்தம் 14 லட்சம் ரூபாய் சிறப்பு நிதி உதவி;என மொத்தம் 32 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு, 8 கோடியே 57 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகை மற்றும் நிதி உதவிக்கான காசோலைகளை இன்று தமிழ்நாடு முதல்அமைச்சர் வழங்கிப் பாராட்டினார்.அதனைத் தொடர்ந்து, ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்ட தமிழ்நாட்டைச்சேர்ந்த 24 வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு முதல் அமைச்சர் சால்வை அணிவித்து பாராட்டுகளைத் தெரிவித்தார்.இந்நிகழ்ச்சியில், சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர், ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் ந. ஆனந்த், பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் ப. வெங்கடரமணன், பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ராஜ்மோகன், உயர்கல்வித் துறை அமைச்சர் பெ. விஸ்வநாதன், செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் ரா. குமார், சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் மு. சாய்குமார்,

காவல்துறை தலைமை இயக்குநர் மகேஷ் குமார் அகர்வால், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை செயலாளர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, இணை முதன்மை செயல் அலுவலர் ஆ. மயில்வாகனன் மற்றும்அரசுஉயர்அலுவலர்கள்கலந்துகொண்டனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.








மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. நிஷாந்த் கிருஷ்ணா, மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைமை அலுவலகத்தில், மத்திய கூட்டுறவு வங்கி தலைமையகக் கிளைமூலம்,தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் சார்பில் கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன் உதவி திட்டத்தின் கீழ் ரூபாய் 50,000 மதிப்பிலான காசோலையை செல்வி டி.முருகேஸ்வரி அவர்களுக்கு வழங்கினார்

## திருப்பரங்குன்றம் மலைமேல் திருவிழா: சமையலுக்கு அனுமதி மறுப்பு பொதுமக்கள் வாக்குவாதம்



திருப்பரங்குன்றம், அக். 10

மதுரை, திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் இன்று மலைமேல் நடைபெற உள்ள வேல் எடுக்கும் விழாவை முன்னிட்டு, பாரம்பரியமாக கதம்ப சாதம் சமைத்து பக்தர்களுக்கு வழங்குவது தொடர்பாக சர்ச்சை ஏற்பட்டுள்ளது. மலைமேல்உணவுசமைக்கதொல்லியல்துறைஅனுமதி மறுத்ததாகக் கூறப்படும் நிலையில், கோவில் வாசல் முன்பு பொதுமக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்தில் அமைந்துள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் ஆண்டுதோறும் புரட்டாசி மாத விழாவையொட்டி, மலைமேல் அமைந்துள்ள காசி விஸ்வநாதர் கோவிலில் வேல் எடுக்கும் விழா நடைபெறுவது வழக்கம். இந்த விழாவின்போது, மலைமேல் பாரம்பரிய முறையில் கதம்ப சாதம் சமைத்து பக்தர்களுக்கு வழங்குவது ஆண்டாண்டு காலமாகப் பின்பற்ற ப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. இதன்படி, இந்த ஆண்டும் விழாவை முன் னி ட் டு மலைப்பகுதியில் உணவு சமைக்க அனுமதி கோரப்பட்டது. ஆனால், மலைமேல் உணவு சமைக்க தொல்லியல் துறை அனுமதி மறுத்ததுடன், இதுதொடர்பாக 7 நிபந்தனைகளையும் விதித்ததாகக் கூறப்படுகிறது. இதனால், விழாவின்போது பாரம்பரியமாக கதம்ப சாதம் சமைத்து பக்தர்களுக்கு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.மலைமேல் உணவு சமைக்க அனுமதி மறுக்கப்பட்டதால்,கோவில்வாசல்முன்புபொதுமக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பான சூழல் நிலவியது.இதற்கிடையே, மலை மேல் உணவு சமைக்க அனுமதி வழங்கக் கோரி மதுரை ஐகோர்ட்டு கிளையில் முறையீடு செய்யப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் நீதிமன்றம் என்ன முடிவு எடுக்கிறது என்பது எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

## பேத்தியை பாலியல் வன்கொடுமை செய்த முதியவருக்கு வாழ்நாள் சிறை



திருச்சி, அக். 10

திருச்சி மாவட்டத்தை சேர்ந்த 60 வயது முதியவர், கடந்த ஆண்டு மே மாதம் 14 வயதுடைய தனது பேத்தியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இது பற்றி அறிந்த சிறுமியின் தாய், ஜீயபுரம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.அதன்பேரில் போலீசார் போக்சோசட்டத்தின்கீழ்முதியவர்மீதுவழக்குப்பதிந்து, அவரை கைது செய்து சிறை யில் அடைத்தனர். இந்த வழக்கின் விசாரணை திருச்சி மகளிர் கோர்ட்டில் நடைபெற்று வந்தது. அரசு தரப்பு வக்கீல் சுமதி ஆஜராகி வாதாடினார். இந்தவழக்கில்திருச்சிமகளிர்கோர்ட்டு நீதிபதி சண்முகப்பிரியா தீர்ப்பு கூறினார். அந்ததீர்ப்பில், முதியவருக்குவாழ்நாள் சிறை தண்டனையும், ரூ.5 ஆயிரம் அபராதமும் விதித்து உத்தரவிட்டார். இந்த வழக்கில் சிறப்பாக செயல்பட்ட இன்ஸ்பெக்டர் ஜெய சித்ரா, பெண் போலீஸ் நித்தியா ஆகியோரை போலீஸ் சூப்பிரண்டு டோங்கரே பிரவீன் உமேஷ் பாராட்டினார்.

## குரூப்4 தேர்வு: காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையை உயர்த்த தமிழக அரசுக்கு எஸ்டிபிஐ கட்சி வலியுறுத்தல்!




சென்னை, அக். 10

தமிழ்நாடுஅரசுப்பணியாளர்தேர்வாணையம் (TNPSC) வெளியிட்டுள்ள குரூப்4 தேர்வு அறிவிப்பில், மிகக் குறைந்த அளவிலான பணியிடங்களே சேர்க்கப்பட்டிருப்பது லட்சக்கணக்கான அரசுப் பணி தேர்வர்களிடையே பெரும் ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது என எஸ்டிபிஐ கட்சியின் மாநில செயல் தலைவர் அச. உமர் பாரூக் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:குரூப்4 போட்டித் தேர்வுஇளநிலை உதவியாளர், கிராம நிர்வாக அலுவலர், உதவியாளர், சுருக்கெழுத்து தட்டச்சர் உள்ளிட்ட தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளுக்குத் தேவையான 46 வகையான பணிகளுக்காக, குரூப்4 போட்டித் தேர்வின் மூலம் 6,574 பேர் தேர்ந்தெடுக்கப்படுவர் என டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது.தமிழ்நாடு அரசுத் துறைகளில் சுமார் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட குரூப்4 பணியிடங்கள் காலியாக இருப்பதாகக் கூறப்படும் சூழலில், நடப்பாண்டில் (2026) இவ்வளவு குறைந்த எண்ணிக்கையிலான காலிப்பணியிடங்களை மட்டுமே நிரப்ப அரசு முன்வந்திருப்பது, இரவு பகலாக படித்து அரசுப் பணிக்காகக் காத்திருக்கும் லட்சக்கணக்கான இளைஞர்களின் நம்பிக்கையில் கல்லைத் தூக்கிப் போடும் செயலாகும்.யானைப் பசிக்கு சோளப் பொரிதமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளில் ஒட்டுமொத்தமாக 6லட்சத்துக்கும்அதிகமானபணியிடங்கள் காலியாக இருப்பதாக அரசு ஊழியர்சங்க அமைப்புகள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றன. இத்தகைய சூழலில், அரசு வெளியிட்டுள்ள இந்த குறைந்தபட்ச அறிவிப்பானது"யானைப்பசிக்குசோளப் பொரி" போட்ட கதையாகவே அமைந்துள்ளது. அரசுத் துறைகளில் உள்ள காலிப்பணியிடங்கள் விரைந்து நிரப்பப்படாததால், தற்போது பணியில் இருக்கும் அரசு ஊழியர்களுக்குப் பணிச்சுமை அதிகரிப்பதோடு, பொதுமக்களுக்கான அரசுச் சேவைகளும் காலதாமதமாகும் நிலை உருவாகிறது.எனவே, அரசுப் பணி தேர்வர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, குறைந்தபட்சம் குரூப்4 பிரிவில் உள்ள மொத்த காலிப்பணியிடங்களில் 10 முதல் 15 சதவீதம் வரையிலான இடங்களையாவது உடனடியாக நிரப்பக்கூடிய வகையில், அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையை உயர்த்த தமிழ்நாடு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## இமானுவேல் சேகரனாரின் வழியில் அனைவரும் ஒன்றிணைந்து சமத்துவத்தை நிலைநாட்ட உழைப்போம்: மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை, அக். 10

ஆங்கிலேயர்களின் ஆதிக்கம், சாதிய ஒடுக்குமுறை ஆகிய இரண்டையும் எதிர்த்துப் பாடுபட்ட இமானுவேல் சேகரனாரின் வழியில் அனைவரும் ஒன்றிணைந்துசமத்துவத்தைநிலைநாட்ட உழைப்போம் என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:இமானுவேல்சேகரன் பிறந்தநாள்; மு.க.ஸ்டாலின் புகழாரம்சாதி ஒழிப்பிற்காகவும் அனைவரும் சமமாக நடத்தப்படுவதற்கும் போராடிய தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் பிறந்தநாள். இந்நாளை அரசு விழாவாகக் கொண்டாட ஆணை பிறப்பித்து, இமானுவேல் சேகரனாருக்கு மணிமண்டபமும் அமைத்து அவரது நினைவைப் போற்றியது நமது திராவிட மாடல் அரசு.ஆங்கிலேயர்களின் ஆதிக்கம், சாதிய ஒடுக்குமுறை ஆகிய இரண்டையும் எதிர்த்துப் பாடுபட்ட இமானுவேல் சேகரனாரின் வழியில் அனைவரும் ஒன்றிணைந்து சமத்துவத்தை நிலைநாட்ட உழைப்போம்!இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## அன்புமணி ராமதாஸ் பிறந்த நாள் : அரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்து



சென்னை, அக். 10

அன்புமணிராமதாஸ்பிறந்தநாளுக்குஅரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.பிறந்த நாள்பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரான அன்புமணி ராமதாஸ் இன்று தனது 58வது பிறந்தநாளை கொண்டாடி வருகிறார். இந்த நிலையில் அவருக்கு பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.வானதி சீனிவாசன்பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான, அன்புமணி ராமதாசுக்கு, பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நல்ல உடல் நலத்துடன் நீண்ட ஆயுளுடன் தங்களது மக்கள் பணி தொடர இறைவனை வேண்டிக்கொள்கிறேன் என அவர் தெரிவித்தார்.நயினார் நாகேந்திரன்இன்றைய தினம் பிறந்த நாள் காணும் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அன்புமணி ராமதாசுக்கு என் மனமார்ந்த பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் மேலும் பல ஆண்டுகள் சிறந்த ஆரோக்கியத்துடன் மக்கள் சேவை செய்ய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன் என தெரிவித்தார்.டிடிவி தினகரன்பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான மதிப்பிற்குரிய அன்புமணி ராமதாசுக்கு எனது மனமார்ந்த பிறந்தநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்புமணி ராமதாஸ் அவர்கள் நீண்ட ஆயுளோடும், பூரண உடல்நலத்தோடும் தனது மக்கள் பணியைத் தொடர்ந்து ஆற்றிட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன் என தெரிவித்தார்.

## மதுராந்தகத்தில் மையத்தில் இருந்து சுயேட்சை வேட்பாளர் வெளியேற்றம்



மதுராந்தகம், அக். 10

ஒட்டுமொத்த தமிழக மக்களிடம் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளின் வாக்கு எண்ணிக்கை தொடங்கி நடைபெற்று வருகிறது. முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டன. அதனை தொடர்ந்து எந்திரத்தில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன.மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் த.வெ.க. முன்னிலை வகித்து வருகிறது. மதுராந்தகத்தில் இரண்டாம் இடத்தில் தி.மு.க.வும், மூன்றாம் இடத்தில் அ.தி.மு.க.வும் இருந்து வருகின்றன. தாராபுரத்தில் இரண்டாம் இடத்தில் அ.தி.மு.க.வும், மூன்றாம் இடத்தில் தி.மு.க.வும் இருந்து வருகின்றன.இந்த நிலையில், மதுராந்தகம்தொகுதிவாக்குஎண்ணிக்கை மையத்தில் இருந்து சுயேட்சை வேட்பாளர் வெளியேற்றப்பட்டுள்ளார். 11வது பூத்தில் வாக்கு இயந்திரம் பழுது அடைந்த நிலையில், அந்த இயந்திரத்தின் விவி பேட் சிலிப்பை எண்ண வேண்டும் என கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் அவரை வெளியேற்றினர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

## வெங்காய விலையைக் குறைக்க 3வது கட்ட நடவடிக்கை! 700 டன் கொள்முதல்



சென்னை, அக். 10

கூட்டுறவுத்துறை அமைச்சர் காந்திராஜ் இன்று (09.10.2026) சென்னை, தண்டையார் பேட்டை, சரக்கு ரெயில் முனையத்தில் தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்திடமிருந்து கொள்முதல் செய்து வரப்பெற்ற 700 மெட்ரிக் டன் வெங்காயத்தினை பார்வையிட்டு, நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யும் பணியினை தொடங்கி வைத்தார். இது தொடர்பாக வெளியாகியுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:தமிழ்நாட்டில் அத்தியாவசியப் பொருளானவெங்காயத்தின்விலைஅண்மைக்காலமாக உயர்ந்து வருவதைக் கட்டுப்படுத்தி, பொதுமக்களுக்கு நியாயமானவிலையில்வெங்காயம்கிடைப்பதைஉறுதி செய்யும் வகையில், தமிழ்நாடு அரசு சந்தை குறுக்கீட்டு நடவடிக்கையாகவெங்காயத்தைக்கொள்முதல்செய்து, கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கும் நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.கூட்டுறவுத்துறை அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் அறிவித்ததன் அடிப்படையில், மூன்றாம் கட்டமாக கூட்டுறவுத் துறையின் 8,914 நகர்ப்புற நியாய விலைக் கடைகள் மற்றும் கூட்டுறவு அங்காடிகளில், ஒரு குடும்ப அட்டைக்கு1கிலோவெங்காயம்ரூ.35என்றவிலையில் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.அதன்படி, முதற்கட்டமாக இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பின் (NAFED) மூலம் 910 மெட்ரிக் டன்னும், தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்திடமிருந்து (NCCF) 65மெட்ரிக்டன்னும்கொள்முதல்செய்யப்பட்டு வழங்கப்பட்டது. மேலும், இரண்டாவது கட்டமாக இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பின் (NAFED) மூலம் 1414.33 மெட்ரிக் டன்னும், தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்திடமிருந்து (NCCF) 460 மெட்ரிக் டன்னும் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, பொதுமக்களின் தொடர்ச்சியான தேவை மற்றும் வரவேற்பைக் கருத்தில் கொண்டு தற்போது மூன்றாவது கட்டமாக 700 மெட்ரிக் டன் வெங்காயத்தை தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்திடமிருந்து கொள்முதல் செய்து, கூட்டுறவுத் துறையின் நியாய விலைக் கடைகள் மூலம் தொடர்ந்து விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, இன்று (09.10.2026) கூட்டுறவுத்துறை அமைச்சர் காந்திராஜ் சென்னை, தண்டையார் பேட்டை, சரக்கு ரெயில் முனையத்தில் தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்திடமிருந்து கொள்முதல் செய்து வரப்பெற்ற 700 மெட்ரிக் டன் வெங்காயத்தினை பார்வையிட்டு, நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யும் பணியினைதொடங்கிவைத்தார்.இந்தநடவடிக்கையின் மூலம், வெங்காயத்தின் விலை உயர்வால் பொதுமக்களுக்கு ஏற்படும் பொருளாதாரச் சுமையைக் குறைத்து, குறிப்பாக ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களுக்கு வெங்காயம் நியாயமான விலையில் தொடர்ந்து கிடைப்பதை தமிழ்நாடு அரசு உறுதி செய்துள்ளது. இந்நிகழ்வின் போது கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) தர்பகராஜ், உட்பட கூட்டுறவுத்துறை அலுவலர்கள், கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மேட்டூர் அணையில் நீர்மட்டம் குறைவால் வெளியே தெரிந்த நந்தி சிலை



சேலம், அக். 10

மேட்டூர் அணையில் நீர்மட்டம் குறைவாக உள்ளதால் நந்தி சிலை வெளியே தெரிகிறது.

நந்தி சிலைசேலம் மாவட்டம் மேட்டூர் அணை காவிரி டெல்டா மாவட்டங்களின் பாசனமற்றும்குடிநீர்ஆதாரமானமேட்டூர் அணைகட்டப்பட்டபோது,அங்குவசித்த பொதுமக்கள் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டனர். இதையடுத்து அவர்கள் வழிபட்டு வந்த ஜலகண்டேஸ்வரர் கோவில் நந்தி சிலை மற்றும்கிறிஸ்தவகோபுரங்கள்எனபுராதனசின்னங்களை அப்படியேவிட்டுவிட்டுஅங்கிருந்துஇடம்பெயர்ந்தனர். சிலை மற்றும் கோபுரம் மேட்டூர் அணையில்மூழ்கிகாணப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 74 அடிக்கு கீழ் வரும் போது கிறிஸ்தவ கோபுரமும், 69 அடிக்கு கீழ் குறைந்தால் நந்தி சிலையும் வெளியே தெரிய தொடங்கும். இந்த நிலையில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் தற்போது 67 அடிக்கு கீழே சரிந்துள்ளதால், பண்ணவாடி நீர்த்தேக்க பகுதியில் மூழ்கியிருந்த ஜலகண்டேஸ்வரர் கோயிலின் நந்தி சிலை தற்போது வெளியே தெரியத் தொடங்கியுள்ளது.

## மனைவி அளித்த வன்கொடுமை புகார்: டி.எஸ்.பி. ஜாபர் சித்திக் கைது



சென்னை,அக். 10

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி துணை போலீஸ் சூப்பிரண்டு ஜாபர் சித்திக். இவருடையமனைவிஷோபனா. இவர்கடந்த ஆகஸ்ட் மாதம் 4ந்தேதி வேலூர் போலீசில் தன்னைகணவர்தாக்கியதாகபுகார்அளித்ததாக கூறப்படுகிறது.அந்தபுகாரின்அடிப்படையில் வேலூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.அதில் குற்றச்சாட்டு உண்மை எனத் தெரியவந்தது. இதனையடுத்து வேலூர் சி.பி.சி.ஐ.டி. போலீசார், பரமக்குடி வந்து துணை சூப்பிரண்டு ஜாபர் சித்திக்கிடம் விசாரணை நடத்தி அவரது அலுவலகத்தையும் சோதனை செய்தனர். இதற்கிடையே ஜாபர் சித்திக்கை தமிழக உள்துறை செயலாளர் சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டார்.இந்த நிலையில், மனைவி அளித்த வன்கொடுமை புகாரில் சஸ்பெண்ட் செய்யப்பட்ட டி.எஸ்.பி ஜாபர் சித்திக் சிபிசிஐடி போலீசாரால் நேற்றிரவு கைது செய்யப்பட்டு வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். பல பெண்களுடன் தொடர்பு இருப்பதுடன், தன்னை சித்ரவதை செய்து துன்புறுத்தியதாக ஜாபர் சித்திக் மீது அவரது காதல் மனைவி, டி.ஜி.பி.யிடம் அளித்த புகாரை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

## மணப்பாடு அருகே கடலில் மீன்பிடி வலைகளை சேதப்படுத்தி சென்ற வணிகக் கப்பல்: ரூ.1.10 லட்சம் நஷ்டம்



தூத்துக்குடி, அக். 10

தூத்துக்குடி மாவட்டம் மணப்பாடு கடல் பகுதியில் மீனவர்களின் மீன்பிடி வலைகளை வணிகக் கப்பல் ஒன்று சேதப்படுத்திய சம்பவம் உள்ளூர் மீனவர் களிடையே அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தி யுள்ளது.நடுவழியில் நேர்ந்த விபத்துதூத்துக்குடி மாவட்டம் மணப்பாடு பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் வழக்கம்போல் கடந்த 7ந்தேதி அன்று கடலுக்குச் சென்று, கரையில் இருந்து சுமார் ஏழரை கடல் மைல் தொலைவில்தங்களதுநாட்டுப்படகுகளில்மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது கடலில் பரப்பி வைக்கப்பட்டிருந்த மீன்பிடி வலைகளின் மீது, அந்த வழியாக வந்த 'சீ ஏஞ்சல்' என்ற பிரம்மாண்ட வணிகக் கப்பல் ஒன்று ஏறிச் சென்றுள்ளது.ராட்சத கப்பலின் அடியில் சிக்கி இழுக்கப்பட்டதால், மீனவர்களின் வாழ்வாதாரமான சுமார் ரூ.1.10 லட்சம் மதிப்பிலான மீன்பிடி வலைகள் முற்றிலும் கிழிந்து நாசமாகின. மீனவர்கள் நடுக்கடலில் போராட்டம்தங்கள் கண் முன்னாலேயே வலைகள் சேதமடைவதைக் கண்ட மீனவர்கள், தங்களது சிறிய படகுகளில் இருந்தபடியே கப்பலை நோக்கி கத்தியும், சைகைகள் காட்டியும் தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர். எனினும், அந்த வணிகக் கப்பல் நிறுத்தப்படாமல் தனது பயணத்தை தொடர்ந்து சென்றது.கடலோர மக்கள் கோரிக்கைகடலின் நடுவே தங்களது வாழ்வாதாரத்தை

இழந்து தவித்த மீனவர்கள், கப்பலை நோக்கி குரல் எழுப்பி போராடிய காட்சிகள் அடங்கிய வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி, கடலோரப் பகுதிகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. இப்பகுதியில் சர்வதேச கப்பல் போக்குவரத்து பாதையை ஒட்டி மீனவர்கள் மீன்பிடிக்கும் போது, இது போன்ற சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதாகவும், இதற்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்றும் கடலோர மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## திருப்பூர் பனியன் நிறுவனத்தில் கொத்தடிமைகளாக வேலை பார்த்த 13 பேர் மீட்பு




திருப்பூர், அக். 10

திருப்பூரில் உள்ள தனியார் பனியன் நிறுவனங்களில்ஏராளமானவெளிமாநில, வெளியூர் தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.மேலும்சிலநிறுவனங்களில் சிறுவர்களையும் பணியமர்த்தி வேலை வாங்கி வருவதாகவும் கூறப்படுகிறது. இதுதொடர்பாக அதிகாரிகள் அவ்வப்போது ஆய்வு நடத்தி நடவடிக்கை எடுத்து வருகின்னர்.இதனிடையே திருப்பூர் கொடிக் கம்பம் பகுதியில் உள்ள ஒரு தனியார் பனியன் நிறுவனத்தில் சிறுவர்களையும், தொழிலாளர் களையும்கொத்தடிமைகளாகவேலைவாங்கிவருவதாக சைல்டுலைன்மற்றும்போலீசாருக்குதகவல்கிடைத்தது. இதுதொடர்பாக அவர்கள் தொழிலாளர் துறை மற்றும் வருவாய்த்துறையினருக்கு தகவல் அளித்தனர். இதைத்தொடர்ந்து திருப்பூர் ஆர்.டி.ஓ. சிவப்பிரகாஷ், தாசில்தார் கோவிந்தசாமி மற்றும் அதிகாரிகள் அங்கு விரைந்து சென்று ஆய்வு நடத்தினார்கள்.அப்போது அங்கு 13 பேர் கொத்தடிமை தொழிலாளர்களாக பணிபுரிந்து வருவது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் அவர்களில் 4 பேர் சிறுவர்கள் என்பது தெரியவந்தது. இதனால் அவர்கள் குறித்த விவரங்களை அதிகாரிகள் சேகரித்தனர்.அவர்கள்தமிழகத்தின்தூத்துக்குடி, தேனி, கிருஷ்ணகிரி, தர் மபுரி, சேலம், ஈரோடு பகுதிகளை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது. வீட்டில் பெற்றோரிடம் கோபித்துக் கொண்டு திருப்பூருக்கு வருபவர்களைசிலர்பஸ்நிலையத்திலேயே மடக்கி இந்த பனியன் நிறுவனத்தில் வேலைக்கு சேர்த்ததும் தெரியவந்தது. அந்த தொழிலாளர்களிடம் குறைந்த சம்பளம் வழங்கி வேலைவாங்கியதும், பனியன் நிறுவனத்துக்கு சொந்தமான இடத்திலேயே வெளித்தொடர்பு இல்லாமல் தங்கவைத்து வேலைவாங்கியதும் விசாரணையில்தெரியவந்தது.கடந்த2ஆண்டுகளுக்கும் மேலாக அவர்கள் கொத்தடிமைகாக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இதைத்தொடர்ந்து அங்கு தங்கியிருந்த 7 ஆண்கள், 6 பெண்கள் உள்பட 13 பேரை அதிகாரிகள் மீட்டனர். அவர்களை திருப்பூர் ஆர்.டி.ஓ. அலுவலகத்துக்கு அழைத்து வந்து அதிகாரிகள்விசாரணைநடத்தினார்கள். அவர்கள் மீட்கப்பட்ட தகவல் அவர்களது பெற்றோர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அவர்கள் காப்பகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது பெற்றோர் வந்ததும் கலெக்டரின் அனுமதியுடன் அவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட உள்ளனர். அவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் அவர்களை கொத்தடிமைகளாக வைத்து வேலை வாங்கிய பனியன் நிறுவனத்தினர் மீது நடவடிக்கை எடுக்கவும் அதிகாரிகள் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

# ஏழை மாணவியின் மருத்துவ படிப்புக்கு உதவிய தொழிலதிபர் : நெகிழ்ச்சி சம்பவம்



தூத்துக்குடி, அக். 10

ஏழைமாணவியின்மருத்துவபடிப்புக்குதொழிலதிபர் உதவியுள்ளார்.தூத்துக்குடி மாவட்டம் ராவுத்தர் பட்டியை சேர்ந்தவர் சித்ராதேவி. இவர் தற்போது நடைபெற்ற நீட் தேர்வில் 462 மதிப்பெண் எடுத்து தேர்ச்சி பெற்றுள்ளார். இந்த நிலையில் ஆதிபராசக்தி மருத்துவ கல்லூரியில் அரசு இட ஒதுக்கீட்டில் சீட் கிடைத்துள்ளது. இது குறித்து மாணவி கடந்த வாரம் செய்தியாளர்களை சந்தித்து பேட்டி அளித்துள்ளார்.இது தொடர்பாக அவர் கூறியதாவது:எனது அப்பா அம்மா என்னைமிகவும்கஷ்டப்பட்டுதான்படிக்கவைக்கிறாங்க. அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லை அப்பா மட்டும் தான் வேலைக்கு சென்று என்னை எனது தங்கை மற்றும் அம்மாவின் மருத்துவ செலவை பார்த்து வருகிறார். தற்போது நீட் தேர்வில் தேர்ச்சி அடைந்த எனக்கு மருத்துவபடிப்பிற்காகவருடத்திற்கு4லட்சம்கட்டணம் கேட்கின்றனர்.இந்த நிலையில் கட்டணம் கட்டுவதற்கு பணம் இல்லாததால் சீட் கிடைத்தும் என்னால் படிக்க முடியாதசூழல்ஏற்பட்டுள்ளது.தமிழகமுதல்அமைச்சர் விஜய்அண்ணாமற்றும்தமிழகஅரசிடம்தனதுமருத்துவ படிப்பிற்கான முழு செலவையும் ஏற்றுக்கொள்ளுமாறு கோரிக்கை வைத்துக்கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.உதவிய தொழிலதிபர்இந்த பதிவு சமூக வலைத்தளங்களில்பரவியது.இதனைபார்த்தவிருதுநகர் மாவட்டம் ராவுத்தன் பட்டியை சேர்ந்த எம்.ஜி.எஸ் எண்டர்பிரைசஸ் நிறுவனரான பாலமுருகன் மாணவியின் வீட்டிற்கு நேற்று வந்துள்ளார். இவர் மாணவியின் முதலாமாண்டு மருத்துவ படிப்பிற்கான தொகையை கொடுத்துள்ளார். மேலும், மாணவியின் மருத்துவ படிப்பிற்கான முழு கல்வி தொகையையும் ஏற்றுக்கொள்வதாக வாக்களித்துள்ளார். இச்சம்பவம் மாணவியின் குடும்பத்தில் மற்றும் சமூக வலைத்தளங்களில் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# உள்துறை செயலாளர் மணிவாசன் பணியிட மாற்றம்



சென்னை, அக். 10

தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:★ உள்துறை செயலாளர் மணிவாசன் நில நிர்வாக ஆணையராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக தமிழ்நாடு சிறுதொழில் மேலாண் கழகத்தின் நிர்வாக இயக்குநராக இருந்த கார்த்திக், உள்துறை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.★ மின்வாரியநிர்வாகஇயக்குநர் அருண் ராய், நிதித்துறை செலவினங்கள் பிரிவு செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். நிதித்துறை செலவினங்கள் பிரிவு செயலாளர் வெங்கடேஷ், வேளாண் துறை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.★ நிலநிர்வாக ஆணையராக இருந்த ராஜேஷ் லக்கானி, மின்வாரிய நிர்வாக இயக்குநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். மின்உற்பத்திக்கழக தலைவராகவும் இவர் செயல்படுவார்.★ ஆவடி மாநகராட்சி ஆணையர் சரண்யா தாம்பரம் மாநகராட்சி ஆணையராக நியமனம். செய்யாறு சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின், ஆவடி மாநகராட்சியின் ஆணையராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.★ குடிநீர் வடிகால் வாரிய இணை நிர்வாக இயக்குநரான சிவகிருஷ்ண மூர்த்தி, தேனி மாவட்ட ஆட்சியராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.★ தேனி ஆட்சியர் வைத்தியநாதன், குடிநீர்வடிகால்வாரிய இணைநிர்வாக இயக்குநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கொண்டனூர் தடுப்பணையை தூர்வாரும் பணி; கனிமொழி சந்தோஷ் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்





கோவை, அக். 10

கோவை மாவட்டம் கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நெ.24 வீரபாண்டி ஊராட்சி ஆனைக்கட்டி அருகே கொண்டனூர் கிராமம் உள்ளது. இந்த கிராமத்தில் ஏராளமான குடும்பங்கள் உள்ளன. இங்கு ஒருதடுப்பணை உள்ளது.மழைக்காலத்தில் இந்த தடுப்பணையில் தண்ணீர் தேங்கி நிற்கும். அப்படி தண்ணீர் தேங்கும்போது நிலத்தடி நீர்மட்டம் உயரும். இதனால் அந்த கிராம மக்கள் பெரிதும் பயன்பெற்று வந்தனர்.அத்துடன்விளைநிலங்களில்உள்ளகிணறுகள், ஆழ் துளை கிணறுகளில் நீர்மட்டம் உயரும் என்பதால் விவசாயிகளுக்கும் பயன் கிடைத்தது.இந்த தடுப்பணையை தூர்வார வேண்டும் என்று அந்தப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் 12 ஆண்டாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால் எவ்வித பயனும் கிடைக்கவில்லை. இது தொடர்பாக அந்தப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் கனிமொழி சந்தோஷ் எம்.எல்.ஏ.வை சந்தித்து கோரிக்கை விடுத்தனர். உடனே அவரும் தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.இதையடுத்து கொண்டனூர் தடுப்பணையை தூர்வார முடிவு செய்யப்பட்டு அதற்கான தொடக்க நிகழ்ச்சி பூமி பூஜையுடன் தொடங்கியது. தூர்வாரும் பணியை கனிமொழி சந்தோஷ் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். தொடர்ந்து அந்த தடுப்பணையை தூர்வாரும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறியதாவது: தடுப்பணையில் தூர்வாரும் பணி தொடங்கி உள்ளதால், மழை பெய்யும்போது தண்ணீர் வீணாகாமல் சேமிக்கப்படும்.

இதனால் இந்த பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயருவதுடன், விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல் கால்நடைகள், வனவிலங்குகளுக்கும் போதிய நீர் ஆதாரம் கிடைக்கும். எங்கள் கோரிக்கையை ஏற்று தடுப்பணையைதூர்வாரநடவடிக்கைஎடுத்தகனிமொழி சந்தோஷ் எம்.எல்.ஏ. மற்றும் அதிகாரிகளுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# கோடையில் குடிநீருக்கு தவம் கிடக்கும் மருதமலை பழங்குடியின மக்கள்!



மருதமலை, அக். 10

மருதமலை ஆண்டவர் வீதியில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கு ஆண்டாண்டு காலமாக குடிநீர் பிரச்சினை நீடித்து வருகிறது. கோடைக்காலத்தில் ஊற்று நீர் குறைந்துவிடுவதால், குடிநீருக்காக அலைந்து திரியும் அவல நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகின்றனர்.250 பேர் வசிக்கும் குடியிருப்புமருதமலை முருகன் கோவிலுக்கு செல்லும் மலைப்பாதையில், பஸ்கள் நிற்கும் இடத்தின் அருகே படிக்கட்டுகள் அமைந்துள்ளன. இந்த படிக்கட்டுகளுக்கு அருகில் மருதமலை ஆண்டவர் வீதி உள்ளது. இங்கு பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர்.இந்த பகுதியில் அரசு சார்பில் கட்டிக் கொடுக்கப்பட்ட 63 தொகுப்பு வீடுகள் உள்ளன.இதுதவிரகுடிசைவீடுகளும்அமைந்துள்ளன.

இவற்றில் 100க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 250 பேர் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு அரசு மற்றும் வனத்துறை சார்பில் பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தாலும், குடிநீர் பிரச்சினைக்கு மட்டும் இதுவரை நிரந்தரத் தீர்வு காணப்படவில்லை.ஊற்று நீரே ஒரே ஆதாரம்மலைப்பகுதியில் இருந்து வரும் ஊற்று நீரையே இப்பகுதி மக்கள் தங்களது அன்றாட தேவைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். மழைக்காலங்களில் ஊற்றில் தண்ணீர் அதிகமாக கிடைப்பதால், குடிநீர் தேவையை ஓரளவுக்கு சமாளித்து விடுகின்றனர்.ஆனால், கோடைக்காலம் தொடங்கியதும் ஊற்றில் நீர்வரத்து குறைந்துவிடுகிறது. இதனால் குடிநீர் கிடைக்காமல் மக்கள் தவிக்கும் நிலை ஏற்படுகிறது.5 ஆயிரம் லிட்டர் தொட்டி இருந்தும் பயனில்லை!இதுகுறித்து அப்பகுதி மலைவாழ் மக்கள் கூறியதாவது:நாங்கள் பல தலைமுறைகளாக இந்த பகுதியில் வசித்து வருகிறோம். எங்களது தண்ணீர் தேவையை மலைப்பகுதியில் இருந்து வரும் ஊற்று நீர்தான் பூர்த்திசெய்துவருகிறது.கோடைக்காலத்தில்ஊற்றில் தண்ணீர் குறைந்துவிடுவதால், தண்ணீரைத் தேடி அலைய வேண்டிய நிலை ஏற்படுகிறது.எங்கள் பகுதியில் 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் தொட்டி உள்ளது. அந்த தொட்டியில் தண்ணீர் நிரப்பி, எங்களது தேவையைப் பூர்த்தி செய்வதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், இதுவரை அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்கள் பலர் எங்கள் பகுதிக்கு வந்து பார்வையிட்டு, உடனடியாக தண்ணீர்வசதிசெய்துகொடுக்கும்படிஅறிவுறுத்தினர். ஆனாலும், எங்களது குடிநீர் பிரச்சினை தீரவில்லை. தண்ணீருக்காக அடிவாரத்துக்கு செல்லும் அவலம்கோவை மாநகராட்சி சார்பில் மருதமலை அடிவாரத்தில் இருந்து கோவிலுக்கு குழாய் மூலம் தண்ணீர்கொண்டு செல்லப்படுகிறது. அந்த குழாயில் இருந்து எங்களுக்கும் தண்ணீர் வழங்குவதாகக் கூறினர்.ஆனால், எங்கள் குடியிருப்பு அருகே அந்த குழாயில் இருந்து சில நேரங்களில் தண்ணீர் பிடித்தாலும், அதை அறிந்த சிலர் உடனடியாக தண்ணீர் வருவதை நிறுத்திவிடுகின்றனர். இதனால், சில சமயங்களில் தண்ணீர் பிடிப்பதற்காக மருதமலை அடிவாரத்துக்கே செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது.மழைக்காலத்தில் ஊற்று நீர் கிடைப்பதால் பெரிய அளவில் பிரச்சினை இருப்பதில்லை. ஆனால், கோடைக்காலத்தில் தண்ணீருக்காக கடுமையாகத் திண்டாட வேண்டியுள்ளது.அதிகாரிகள் அவ்வப்போது எங்கள் பகுதிக்கு வந்து, தண்ணீர் வசதி செய்து கொடுப்பதாக உறுதி அளித்துச் செல்கின்றனர். ஆனால், இதுவரை தண்ணீர் கிடைக்கவில்லை. எனவே, மாவட்ட நிர்வாகம்உடனடியாகநடவடிக்கைஎடுத்து,எங்களது அடிப்படைத் தேவையான குடிநீர் வசதியை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்

# உதவி பேராசிரியர்களுக்கான நெட் தகுதி தேர்வு; அறிவிப்பு வெளியீடு



சென்னை, அக். 10

டிசம்பர் 19,22,27 ஆகிய தேதிகளில் தேர்வு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தேர்வுக்கு தகுதியான விண்ணப்பதாரர்கள் அடுத்த மாதம் 5 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என, தேசிய தேர்வுகள் முகமை தெரிவித்துள்ளது.நெட் தகுதி தேர்வுஅரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேர ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். இதேபோல், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உதவி பேராசிரியர் பணியில் சேர வேண்டுமானால் “ஸ்லெட்” அல்லது “நெட்” தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். ஸ்லெட் தேர்வில் வெற்றிபெற்றால் தமிழ்நாட்டில் மட்டுமே பணிபுரிய முடியும். ஆனால், நெட் தேர்ச்சி பெறுவோர் தமிழகம் உள்பட இந்தியாவின் எந்த மாநிலத்திலும் உள்ள கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் உதவி பேராசிரியர் பணியில் சேரும் தகுதியைப் பெறுவார்கள். பி.எச்டி. பட்டம் பெற்றிருந்தால் நெட், ஸ்லெட் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெறத் தேவையில்லை. டிசம்பரில் தேர்வுஅந்த வகையில்,அறிவியல் பாடப்பிரிவுசார்ந்தஉதவிப்பேராசிரியர்பணியிடத்துக்கு, சி.எஸ்.ஐ.ஆர்., நெட் தேர்வு நடத்தப்படுகிறது. நடப்பாண்டில் டிசம்பர் மாத ஸ்லெட் மற்றும் நெட் தேர்வு நடைபெற உள்ளது. டிசம்பர் 19,22,27 ஆகிய தேதிகளில் தேர்வு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தேர்வுக்கு தகுதியான விண்ணப்பதாரர்கள் https://csirnet.nta.ac.in இணையதளத்தில். அடுத்த மாதம் 5 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என, தேசிய தேர்வுகள் முகமை தெரிவித்துள்ளது.3 துணைத் தேர்வுகள்நெட் தேர்வை பொறுத்தவரை பொதுவாக 3 துணைத் தேர்வுகளை உள்ளடக்கியது ஆகும். மூன்று தேர்வுகளுமே கொள்குறி வகையில்தான் இருக்கும்.. முதல் தேர்வில் விண்ணப்பதாரரின் ஆசிரியர் பணி மற்றும் ஆராய்ச்சி மீதான ஆர்வத்தைச்சோதிக்கும் வகையில் 60 வினாக்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றில் பிடித்தமான ஏதேனும் 50 கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டும். 2வது தேர்வில் சம்பந்தப்பட்ட பாடத்தில் இருந்து 50 கேள்விகள் கேட்டிருப்பார்கள். 3வது தேர்வில் சம்பந்தப்பட்ட பாடத்தில் இருந்து 75 வினாக்கள் இடம்பெற்றிருக்கும்.

# கிராமங்களின் தேவைகளை கண்டறிய டிரோன் வசதி: அமைச்சர் ஆனந்த் தகவல்



சென்னை, அக். 10

ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு டிரோன் மூலம் கிராமங்களுக்கு தேவையானதை கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என தமிழக ஊரக வளர்ச்சி மற்றும்நீர்வளத்துறைஅமைச்சர்ஆனந்த் தெரிவித்தார்.

சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள கலைவாணர் அரங்கில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் "வெற்றித் தமிழகம் தொலைநோக்கு ஆவணம் செயல்திட்ட முன்னெடுப்பு மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள்" தொடர்பான முதல் மண்டல மாநாடு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் ஆனந்த் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் காஞ்சீபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை உள்ளிட்ட 11 மாவட்டங்களைச் சேர்ந்த ஊராட்சித் துறை அதிகாரிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் அமைச்சர் ஆனந்த் பேசுகையில், "நமது துறை சார்பில் ஏராளமான நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளிடம் பெரு நிறுவன சமூக பொறுப்புணர்வு நிதி கேட்டிருக்கிறோம். 60:40 என்ற விகிதத்தில் இல்லாமல், அந்த நிதியைமுழுவதுமாகசம்பந்தப்பட்ட நிறுவனமே செலவு செய்யட்டும். நீங்கள் அவர்கள் செலவு செய்யும் திட்டப்பணிகளை மட்டும் மேற்பார்வையிட வேண்டும். இந்த விவகாரத்தில் பழைய காலங்களில் நிறைய தவறுகள் நடந்திருக்கின்றன. இனி வரும் காலங்களில் அது நடக்கக்கூடாது. நடக்கவும் விடமாட்டோம். நாம் அனைவரும் இணைந்து ஒவ்வொரு கிராமத்திற்கும் என்ன தேவையோ அதை செய்து கொடுப்போம். ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு டிரோன் மூலம் கிராமங்களுக்கு தேவையானதை கண்டறியவும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. இதுதொடர்பாக தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சரிடம் பேசியிருக்கிறோம். எந்த இடத்தில் சாலை வசதி இல்லை?. எந்த இடத்தில் தூர்வார வேண்டும்? உள்ளிட்ட தேவைகளை இதன் மூலம் அறியலாம்" என்றார்.

# அமைச்சர் ஆதவ் அர்ஜுனா நிறுவனத்திடம் ரூ.2.6 கோடி மோசடி: இடைத்தரகர் கைது



சென்னை, அக். 10

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா நிறுவனத்துக்கு வெளிநாட்டு கார் வாங்கி தருவதாக கூறி ரூ.2.60 கோடி மோசடியில் ஈடுபட்ட இடைத்தரகர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.பரபரப்பு புகார்அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவுக்கு சொந்தமான நிறுவனம் ஒன்று சென்னை ஆழ்வார்பேட்டை பகுதியில் செயல்படுகிறது. இந்தநிறுவனத்தின்இயக்குனர்ராம்குமார்(வயது 45) என்பவர் சென்னை தேனாம்பேட்டை போலீஸ் நிலையத்தில் பரபரப்பு புகார் மனு ஒன்றை கொடுத்தார். அந்த புகார் மனுவில் அவர் கூறியிருப்பதாவது:எங்கள் நிறுவனத்தின் பயன்பாட்டுக்காக கடந்த 2024ம் ஆண்டு டயோட்டோலன்ட் குருசர் 300 இசட் எக்ஸ் என்ற காரை வாங்க முடிவு செய்தோம். இது, வெளிநாட்டு கார் ஆகும். இதை வாங்குவதற்காக கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தஅனுப்சுமித்பெர்னாண்டஸ்என்றஇடைத்தரகரை அணுகினோம்.ரூ.2.60 கோடிஅவர், தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் உள்ள தனியார் நிறுவனத்தின் மூலம் மேற்படி வெளிநாட்டு காரை வாங்கி தருவதாக கூறினார். அதற்கான முழு பணத்தையும் செலுத்திய பிறகு 40 நாட்களுக்குள் குறிப்பிட்ட கார் வாங்கி தரப்படும் என்று உறுதி அளித்தார். அதன்பேரில் 2 தவணைகளாக ரூ.2.60 கோடியை குறிப்பிட்ட தனியார் நிறுவனத்தின்வங்கிகணக்கிற்குபரிமாற்றம்செய்தோம். ஏமாற்றும் நோக்கம்ஆனால், பேசியபடி அனுப் சுமித் பெர்னாண்டஸ் குறிப்பிட்ட காரை வாங்கி தரவில்லை. இதனால் நாங்கள் கொடுத்த பணத்தை திருப்பி கேட்டோம். அந்த பணத்தையும் தரவில்லை. அவர் ஏமாற்றும் நோக்கத்தோடு செயல்படுவது தெரியவந்துள்ளது. எனவே, உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை எடுத்து நாங்கள் கொடுத்த ரூ.2.60 கோடி பணத்தை மீட்டு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது.போலீஸ் விசாரணைஇந்த புகார் மனு தொடர்பாக தேனாம்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். விசாரணையில் குறிப்பிட்ட கார் வெளிநாட்டில் இருந்து வாங்கப்பட்டு மும்பை துறைமுகத்துக்கு உரிய அனுமதி பெறாமல் கொண்டுவரப்பட்டதாகவும், அதனால் சுங்கத்துறையினர் ரூ.65 லட்சம் வரி போட்டதாகவும் கூறப்படுகிறது.இடைத்தரகர் அனுப் சுமித் பெர்னாண்டஸ், இந்த பிரச்சினையை முறையாக அணுகாததால் மேற்படி காரை மும்பையில் இருந்து சென்னைக்கு கொண்டுவர முடியவில்லை என்று தெரியவந்தது.இதுபற்றி அவரிடம் விசாரிப்பதற்காக அவரை அணுகியபோது அவர் வெளிநாடு தப்பி சென்று விட்டார். எனவே, லுக் அவுட் நோட்டீஸ் வழங்கி அவர் பற்றியதகவல்கள்அனைத்துவிமானநிலையங்களுக்கும் அனுப்பப்பட்டது.கைதுகடந்த 5ந் தேதியன்று அனுப் சுமித்பெர்னாண்டஸ், கத்தார்நாட்டில்இருந்துவிமானம் மூலம் மும்பை விமான நிலையத்துக்கு வந்து இறங்கினார்.மும்பை விமான நிலைய குடியுரிமை அதிகாரிகள் அவரை மடக்கி பிடித்து, தேனாம்பேட்டை போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். உடனடியாக தேனாம்பேட்டை தனிப்படை போலீசார் மும்பைக்கு விரைந்து சென்று அனுப் சுமித் பெர்னாண்டசை கைது செய்து நேற்று முன்தினம் சென்னை அழைத்து வந்தனர். அவரிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டது. பின்னர் நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டார்.

# கோத்தகிரி அருகே ஆர்ப்பரித்து கொட்டும் உயிலட்டி நீர்வீழ்ச்சி: விவசாயிகள் மகிழ்ச்சி



கோத்தகிரி, அக் 10

கோத்தகிரி அருகே உயிலட்டி நீர்வீழ்ச்சியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் இருந்து கூக்கல்தொரை செல்லும் சாலையில் உயிலட்டி கிராமப்பகுதியில் நீர் வீழ்ச்சி ஒன்று அமைந்துள்ளது. இந்த நீர்வீழ்ச்சி தண்ணீரைநம்பி, உயிலட்டி, கூக்கல்தொரை, மசக்கல் கிராமங்களில் சுமார் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் மலை காய்கறிகள் மற்றும் ஏற்றுமதி தரம் வாய்ந்த இங்கிலீஷ் காய்கறிகளை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். இந்த நிலையில் கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில மாதங்களாக வறட்சியான சீதோஷ்ண நிலை நிலவியதால், நீர்வீழ்ச்சி வறண்டு நீர்வரத்து குறைந்ததால் விவசாயம் பாதிக்கப்பட்டது. எனவே பணம் கொடுத்து லாரிகள்மூலம்தண்ணீரைகொண்டு வந்து பயிர்களுக்கு பாய்ச்ச வேண்டிய சிரமம் ஏற்பட்டது. இதையடுத்து கோத்தகிரி பகுதியில் சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக இந்த நீர்வீழ்ச்சிக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் உயிலட்டி நீர் வீழ்ச்சியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஆர்ப்பரித்து கொட்டி வருகிறது. அருவியில் கொட்டும் வெள்ளம், காண்போரின் கண்களுக்கு விருந்தாக அமைகிறது. இந்த காட்சியை காண சுற்றுலாப் பயணிகளும், உள்ளூர் மக்களும் சென்று தொலைவில் இருந்து கண்டுகளித்து, ஆர் வத்துடன் புகைப்படம் எடுத்துச் செல்கின்றனர். மேலும் இந்த அருவி நீரை நம்பி விவசாயம் செய்து வரும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

10.10.2026

# தீவுத்திடலில் பட்டாசு கடை ஒதுக்கக்கோரி வழக்கு: அரசு பதில் அளிக்க ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, அக். 10

சென்னை ஐகோர்ட்டில், பட்டாசு முகவர்கள் நலச்சங்கம் சார்பில் தாக்கல் செய்துள்ள மனுவில், அரசு விதிக்கும் நிபந்தனைகளை பின்பற்றி 2014ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி பண்டிகை முன்னிட்டு பட்டாசு விற்பனை செய்துவருகிறோம்.பட்டாசுவிற்பனைக்கு எங்களது சங்கத்துக்கு இடம் ஒதுக்க வேண்டும் என சென்னை ஐகோர்ட்டு பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், கடந்த ஆண்டு எங்கள் சங்க உறுப்பினர்களுக்கு தீவுத் திடலில் இடம் ஒதுக்கப்பட்டது. தீவுத் திடலை தற்போது பஸ் நிலையமாக பயன்படுத்தி வருவதால் பட்டாசு கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு தீபாவளி பட்டாசு விற்பனைக்காக எங்களுக்கு இடம் ஒதுக்கக்கோரி, கடந்த ஜூலை மாதம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்துக்கு அனுப்பப்பட்ட மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை" என்று கூறப்பட்டிருந்தது.ஐகோர்ட்டு உத்தரவுஇந்த வழக்கு நீதிபதி பி.டி.ஆஷா முன்பு விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்தரப்பில், "பட்டாசுவிற்பனைக்கு இடம் ஒதுக்கக்கோரி ஒவ்வொரு ஆண்டும் ஐகோர்ட்டை நாட வேண்டியுள்ளது" என்று வாதிடப்பட்டது. அரசு தரப்பில், "இந்த ஆண்டு பட்டாசு விற்பனைக்கு கடைகள் ஒதுக்குவது தொடர்பாக விரைவில் டெண்டர் விடப்படும் என தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, மனு குறித்து சுற்றுலாத்துறை செயலாளர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக மேலாண்மை இயக்குனர். பொதுமேலாளர் உள்ளிட்டோர் பதிலளிக்க உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை வருகிற 13ந்தேதிக்கு தள்ளி வைத்தார்.

# அதிமுக எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா வழக்கில் தீர்ப்பு இல்லை



சென்னை, அக். 10

அ.தி.மு.க.வைச் சேர்ந்த 6 எம்.எல்.ஏ.க்களின் ராஜினாமா கடிதத்தை சபாநாயகர் ஏற்றதை எதிர்த்து அ.தி.மு.க. கொறடா, தேசிய மக்கள் சக்தி கட்சித் தலைவர் எம்.எல்.ரவி ஆகியோர் தனித்தனியாக சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி. நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர். தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்தனர். இந்த நிலையில், இந்த வழக்கு தீர்ப்புக்காக பட்டியலிடப்பட்டிருந்த நிலையில், தலைமை நீதிபதிவிடுப்புகாரணமாகதீர்ப்புஒத்திவைக்கப்பட்டு வரும்12ம்தேதிக்குதீர்ப்புதள்ளிவைக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (10.10.2026)

மேஷம்: நினைத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம். தொழிலில் புதிய முயற்சிகளுக்கு ஆதரவுகிடைக்கும்.குடும்பத்தில் நிதானமாகப் பேசுவது நல்லது.

ரிஷபம்: பணவரவு தொடர்பான முயற்சிகள் சாதகமாக அமையலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தேவையற்ற செலவுகளைக் குறைக்கவும்.

மிதுனம்: புதிய தொடர்புகள் மூலம் நன்மை கிடைக்கலாம். உத்தியோகத்தில் உங்கள் திறமை வெளிப்படும். முக்கிய முடிவுகளைச் சிந்தித்து எடுக்கவும்.

கடகம்: குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். வேலைகளில் பொறுமை அவசியம். மன அமைதிக்காக ஓய்வெடுக்கவும்.

சிம்மம்: தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகளை ஆராயலாம். பேச்சில் நிதானம் நன்மை தரும்.

கன்னி: நிலுவையில் உள்ள பணிகளை முடிக்க முயற்சி செய்வீர்கள். பண விஷயங்களில் கவனம் தேவை. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தவும்.

துலாம்: உறவுகளில் நல்ல புரிதல் ஏற்படலாம். கூட்டுத் தொழிலில் ஆலோசித்து முடிவெடுக்கவும். செலவுகளைத் திட்டமிடுவது நல்லது.

விருச்சிகம்: தடைகளைத் தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ளலாம். குடும்பத்தில் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. அவசர முதலீடுகளைத் தவிர்க்கவும்.

தனுசு: புதிய முயற்சிகளில் ஆர்வம் அதிகரிக்கும். பயணங்களில் கவனம் தேவை. உத்தியோகத்தில் முன்னேறத் திட்டமிடுவீர்கள்.

மகரம்: கடின உழைப்புக்கான பலன் கிடைக்க வாய்ப்புள்ளது. பொறுப்புகளைச் சரியாக நிறைவேற்றுவீர்கள். சேமிப்பில் கவனம் செலுத்தவும்.

கும்பம்: நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கலாம். புதிய யோசனைகள் தொழிலில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். குடும்ப உறவுகளை மதித்து நடக்கவும்.

மீனம்: மனதில் தெளிவு ஏற்படலாம். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் அமையும். பணம் தொடர்பான முடிவுகளை நன்கு ஆராய்ந்து எடுக்கவும்.

# இடைத்தேர்தல் முடிவுகள்; த.வெ.க. அரசின் 4 மாத நல்லாட்சிக்கு கிடைத்த வெற்றி அமைச்சர் நிர்மல் குமார்



சென்னை, அக். 10

மதுராந்தகம், தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டு வருகின்றன. வாக்கு எண்ணிக்கை தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், 2 தொகுதிகளிலும் த.வெ.க. வெற்றியை உறுதி செய்துள்ளது. இதையடுத்து த.வெ.க. தொண்டர்கள் வெற்றியை உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர். இந்நிலையில், இது த.வெ.க. அரசின் 4 மாத நல்லாட்சிக்கு கிடைத்த வெற்றி என அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது; "மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளிலும் கிடைத்திருக்கும் வெற்றியானது, முதல்அமைச்சர் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசின் 4 மாத நல்லாட்சிக்கு கிடைத்த வெற்றியாக கருதப்படும். தமிழக மக்கள் மாற்றத்தை விரும்பி சட்டமன்ற தேர்தலில் வாக்களித்தனர். அதனை தொடர்ந்து இன்று அ.தி.மு.க. இருக்கும் நிலையை உணர்ந்து அக்கட்சியில் இருந்து பலர் வெளியேறி வருகின்றனர். அந்த வகையில் 2 தொகுதிகளில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் த.வெ.க.வில் இணைந்து இடைத்தேர்தலை சந்தித்தனர். இந்நிலையில், இடைத்தேர்தலில் த.வெ.க. மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்றுள்ளது. வாக்களித்த மக்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த நல்லாட்சி வரும் காலங்களில் கண்டிப்பாக தொடரும். மக்கள் தெளிவாக இருக்கின்றனர். அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் தமிழகத்திற்கு விரோதமான கட்சிகள் என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர். இனி வரும் அனைத்து தேர்தல்களிலும் த.வெ.க. வேட்பாளர்கள் மட்டுமே வெற்றி பெறுவார்கள். மக்கள் விரும்பும் அரசாக த.வெ.க. அரசு இருக்கும்." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பிளஸ்1 மாணவி பாலியல் பாலியல் வன்கொடுமை: கல்லூரி மாணவர், போக்சோவில் கைது



நாகப்பட்டினம், அக். 10

நாகை அருகே கீழ்வேளூர் பகுதியை சேர்ந்த 11ம் வகுப்பு மாணவி ஒருவர். 17 வயதான கல்லூரி மாணவர் ஒருவரை காதலித்து வந்துள்ளார். இந்த நிலையில் மாணவியை திருமணம் செய்து கொள்வதாக கூறி, கல்லூரி மாணவர் நெருக்கமாக இருந்ததாக கூறப்படுகிறது. இதையறிந்த மாணவியின் பெற்றோர் நாகை அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர்.அந்த புகாரின்பேரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் வேம்பரசி, சப்இன்ஸ்பெக்டர் வேம்பு மற்றும் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் கல்லூரி மாணவர் மீது வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர்.

# வெற்றிப் பயணம் திட்டத்தால் கூடுதல் நிதிச்சுமையா?; பேருந்துகள் சாதாரண கட்டணத்துக்கு மாற்றம்: வருவாய் இழப்பை ஈடுகட்டுவது எப்படி?

சென்னை, அக். 10

தமிழகத்தில் மகளிரின் இலவசப் பயணத்துக்கான வெற்றிப் பயணம் திட்டத்தின் கீழ், மாவட்டங்களில் இயக்கப்படும் 340 விரைவு மற்றும் சொகுசு பஸ்கள் சாதாரண கட்டண பஸ்களாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் ஆண் பயணிகளுக்கு ரூ.10 முதல் ரூ.16 வரை கட்டணம் குறைந்துள்ளது. ஆனால், இதனால் போக்குவரத்துக் கழகங்களுக்குஏற்படும்வருவாய்இழப்பை அரசு எவ்வாறு ஈடுகட்டும் என்ற கேள்வி எழுந்துள்ளது.தமிழகத்தில்இத்திட்டத்தின் கீழ் மாநகர, நகரமற்றும்புறநகர்பகுதிகளில் மொத்தம் 12,695 பேருந்துகள் மகளிர் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். இதில், மாவட்டங்களுக்கு இடையே இயக்கப்படும் சாதாரண கட்டண பேருந்துகளின் எண்ணிக்கை 2,050ல்இருந்து2,390ஆகஅதிகரித்துள்ளது. இதற்காக கூடுதலாக 340 விரைவு, சொகுசு பேருந்துகள் சாதாரண கட்டணத்துக்கு மாற்றப்பட்டுள்ளன. ஏற்கனவே கடன் சுமை, வருவாய்பற்றாக்குறை, பராமரிப்புச் செலவு உள்ளிட்ட நெருக்கடிகளைச் சந்தித்து வரும் போக்குவரத்துக் கழகங்களுக்கு, கட்டண மாற்றத்தால் ஏற்படும் நிதி தாக்கம் குறித்த கேள்விகள் எழுந்துள்ளன. மகளிர் இலவசப் பயணத்துக்கான தொகையை அரசு உரிய காலத்தில் வழங்குகிறதா என்பதும் முக்கியமாகியுள்ளது. மேலும், காலிப்பணியிடங்களை நிரப்புதல், நிலுவைப் பணப்பலன்கள் வழங்குதல், தினசரி வசூல் ஊக்கத்தொகை உள்ளிட்ட ஊழியர்களின் கோரிக்கைகள் நிலுவையில் உள்ளன. இந்த நிலையில், கட்டண மாற்றத்தால் ஊழியர்களின் பணப்பலன்கள் பாதிக்கப்படுமா என்ற அச்சமும் எழுந்துள்ளது. எனவே, பேருந்துகளின் கட்டண மாற்றத்தால் ஏற்படும் வருவாய் இழப்பு எவ்வளவு, அதை ஈடுகட்ட அரசு ஒதுக்கியுள்ள நிதி எவ்வளவு, போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலையைப் பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதற்கு போக்குவரத்துத் துறை விளக்கம் அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

# "எனக்கு குழந்தைகள் வேண்டாம்" வரலட்சுமி சரத்குமார் ஓபன் டாக்!



வளர்ப்பு என்பது மிகப்பெரிய பொறுப்பு என்றும், அதற்குத் தயாராக இல்லாவிட்டால் குழந்தை பெற்றுக்கொள்ளாமல் இருப்பதே சரியான முடிவு என்றும் அவர் கூறியுள்ளார். குழந்தை பெற்றுக்கொள்ள விருப்பமில்லை!தமிழ், தெலுங்கு உள்ளிட்ட மொழிப்படங்களில் நடித்து வருபவர் வரலட்சுமி சரத்குமார். இவர் கடந்த 2024ஆம் ஆண்டு மும்பையைச் சேர்ந்த தொழிலதிபரும் கலைக்கூட உரிமையாளருமான நிக்கோலாய் சச்தேவைத் திருமணம் செய்துகொண்டார்.இந்நிலையில், அண்மையில் அளித்த நேர்காணல் ஒன்றில் பேசிய வரலட்சுமி, தனக்குக் குழந்தை பெற்றுக்கொள்ள விருப்பமில்லை என்று தெரிவித்துள்ளார். இது குழந்தை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காரணமாக எடுக்கப்பட்ட முடிவு அல்ல என்றும், தனது தனிப்பட்ட விருப்பத்தின் அடிப்படையில் எடுத்த முடிவு என்றும் அவர் விளக்கமளித்துள்ளார். தனது கணவர் நிக்கோலாயும் இதே கருத்தைக்கொண்டிருப்பதாகக்கூறியுள்ளார். "குழந்தைவளர்ப்புமிகப்பெரியபொறுப்பு" குழந்தையைப்பெற்றெடுப்பதற்கு முன்பு, அதன் வளர்ப்புக்கான முழுப் பொறுப்பையும் ஏற்கத் தயாராக இருக்கிறோமா என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும் என்று வரலட்சுமி தெரிவித்துள்ளார். அந்தப் பொறுப்பை ஏற்கத் தயாராக இல்லாதவர்கள் குழந்தை பெற்றுக்கொள்ளாமல் இருப்பதும் பொறுப்பான முடிவுதான். திருமணமானவர்கள் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்றும், இது ஒவ்வொருவரின் தனிப்பட்ட முடிவு என்றும் அவர் தனது கருத்தைப் பகிர்ந்துள்ளார். "அவரது மகளும் எங்கள் செல்லப்பிராணிகளும் குடும்பம்தான்!" நிக்கோலாய் சச்தேவுக்கு முதல் திருமணத்தின் மூலம் ஒரு மகள் உள்ளார். அவரைத் தனது மகளாகவே கருதுவதாக வரலட்சுமி தெரிவித்துள்ளார். மேலும், தம்பதியரிடம் உள்ள இரண்டு செல்ல நாய்களையும் தங்களது குழந்தைகளைப் போல வளர்த்து வருவதாகக் கூறியுள்ளார். குழந்தை பெற்றுக்கொள்வது தொடர்பான தனது வெளிப்படையான கருத்துகளை வரலட்சுமி பகிர்ந்துள்ள நிலையில், அவரது பேச்சு தற்போது கவனம் பெற்றுள்ளது.

# 'டிமான்டி காலனி' இயக்குநருடன் கைகோர்க்கும் நடிகை நயன்தாரா



லேடி சூப்பர்ஸ்டார்நயன்தாரா, இயக்குநர்அஜய் ஞானமுத்து இயக்கத்தில் உருவாகும் புதிய படத்தில் நடிக்கவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.22 ஆண்டுகளைக் கடந்த திரைப்பயணம்கடந்த 2005ஆம் ஆண்டு வெளியான 'ஐயா' திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமானவர்நயன்தாரா. தொடர்ந்து பல வெற்றிப் படங்களில் நடித்து ரசிகர்களிடையே தனக்கென ஓர் இடத்தைப் பிடித்தார். தற்போது 'லேடி சூப்பர் ஸ்டார்' என ரசிகர்களால் கொண்டாடப்படும் இவர், தமிழ் மட்டுமின்றி தெலுங்கு, மலையாளம், இந்தி உள்ளிட்ட மொழிப் படங்களிலும் நடித்து வருகிறார். பல படங்களில் பிசிநயன்தாரா பல்வேறு திரைப்படங்களில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறார். அந்த வகையில், 'மான்ஸ்டர்', 'டியர் ஸ்டூடண்ட்ஸ்', 'ராக் காயி', 'மண்ணாங்கட்டி சின்ஸ் 1960' உள்ளிட்ட படங்கள் தொடர்பான எதிர்பார்ப்புகள் நிலவி வருகின்றன. மேலும், 'மூக்குத்தி அம்மன் 2' திரைப்படமும் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.அஜய் ஞானமுத்துவுடன் கூட்டணி?இதற்கிடையில், கதாநாயகிக்கு முக்கியத்துவம்அளிக்கும்புதியதிரைப்படத்தில்நயன்தாராநடிக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது. 'டிமான்டி காலனி', 'இமைக்கா நொடிகள்', 'கோப்ரா' உள்ளிட்ட படங்களை இயக்கிய அஜய் ஞானமுத்து இப்படத்தை இயக்கவுள்ளதாகவும், கற்பனை கலந்த பொழுதுபோக்குத் திரைப்படமாக உருவாகவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.இப்படம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு இதுவரை வெளியாகாத நிலையில், நயன்தாரா–அஜய் ஞானமுத்து கூட்டணி குறித்த தகவல் ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சமூக வலைதளங்களில் இருந்து விலகியதால் மன நிம்மதி அதிகரித்துள்ளது! நடிகை ஐஸ்வர்யா லட்சுமி

மருத்துவப் படிப்பை முடித்த ஐஸ்வர்யா லட்சுமி, கடந்த 2017ம் ஆண்டு வெளியான மலையாளத் திரைப்படமான 'நண்டுகளுடே நாட்டில் ஓரிடவேளா' மூலம் திரையுலகில் அறிமுகமானார். தொடர்ந்து 'மாயாநதி', 'வரத்தன்' உள்ளிட்ட மலையாளப் படங்களில் நடித்து பிரபலமானார். தமிழில் 'ஆக்ஷன்', 'ஜகமே தந்திரம்', 'பொன்னியின் செல்வன்', 'கட்டா குஸ்தி', 'தக் லைப்' உள்ளிட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார். தனது நடிப்பின் மூலம் ரசிகர்களிடையே தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துள்ளார். தற்போது நடிகை ஐஸ்வர்யா லட்சுமி, அர்ஜுன் தாஸ் நடிப்பில் பாலாஜி மோகன் இயக்கியுள்ள 'லவ்' என்ற நெட்பிளிக்ஸ் தொடரில் நடித்துள்ளார். மேலும், மலையாளத் திரைப்படமான 'ஆஷா' ஆகிய படங்களிலும் நடித்துள்ளார். இதற்கிடையில், சமூக வலைதளங்களில் இருந்து விலகிய தனது முடிவு குறித்தும், அதனால் ஏற்பட்டமாற்றங்கள்குறித்தும்அவர்மனம்திறந்துள்ளார்.கடந்த2025ம்ஆண்டுசெப்டம்பர்மாதம்சமூகவலைதளங்களில் இருந்து விலகிய ஐஸ்வர்யா லட்சுமி, ஓராண்டுக்கும் மேலாக அந்த முடிவில் உறுதியாக இருந்து வருகிறார். சமீபத்திய பேட்டி ஒன்றில் இதுகுறித்துப் பேசிய அவர், சமூக வலைதளங்களில் இருந்து விலகிய பிறகு முன்பைவிட அதிக மன அமைதியுடன் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும், சமூக வலைதளங்களில் நிலவும் தேவையற்ற விமர்சனங்கள் மற்றும் பிறருடன் ஒப்பிட்டுப் பார்க்கும் மனநிலை ஆகியவற்றிலிருந்து விலகியிருப்பது தனக்கு நிம்மதியை அளித்துள்ளதாகத்தெரிவித்துள்ளார்.தற்போதுதனதுவாழ்க்கையில்மகிழ்ச்சியாகஇருப்பதாகவும்,சமூகவலைதளங்களில் முன்பு இருந்தபோது ஏற்பட்ட பாதிப்புகள் இப்போதும் ஓரளவுக்கு இருந்தாலும், அவற்றைத் தொடர்ந்து பார்த்து மனதளவில் பாதிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார். சமூக வலைதளங்கள் புதிய படைப்பாளிகள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தவும், திரைத்துறையில் வாய்ப்புகளைப் பெறவும் உதவுகின்றன என்பதை ஏற்றுக்கொண்ட ஐஸ்வர்யா லட்சுமி, தனிப்பட்ட முறையில் அவற்றிலிருந்து விலகியிருப்பதே தனக்கு மகிழ்ச்சியையும் மன அமைதியையும் அளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# 2வது ஒருநாள் போட்டி: இந்தியா ஏக்கு 276 ரன்கள் இலக்கு நிர்ணயித்த ஆஸ்திரேலியா



2வது அதிகாரப்பூர்வமற்ற ஒருநாள் போட்டியில் இந்தியா ஏ அணிக்கு 276 ரன்கள் இலக்கு நிர்ணயித்துள்ளது ஆஸ்திரேலியா ஏ.டாஸ்இந்தியா ஏ மற்றும் ஆஸ்திரேலியா ஏ அணிகள் மோதும் 2வது அதிகாரப்பூர்வமற்ற ஒருநாள் போட்டி இன்று புதுச்சேரியில் நடைபெற்று வருகிறது. இப்போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா ஏ அணி முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. அதன்படி களமிறங்கிய அந்த அணி, 49.5 ஓவர்களில் 275 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.ஆஸ்திரேலியா ஏ அணியில் சாம் கான்ஸ்டாஸ் 67 ரன்களும், ஜோஷ் பிலிப் 58 ரன்களும் எடுத்தனர். நாதன் மெக்ஸ்வீனி 32 ரன்களும், மிட்செல் ஓவன் 25 ரன்களும் சேர்த்தனர். இந்தியா ஏ அணி தரப்பில் அர்ஷத் கான் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இதையடுத்து 276 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இஅல்க்குடன் இந்தியா ஏ அணி களமிறங்கி உள்ளது.இந்தத் தொடரின் முதல் போட்டியில் ஆஸ்திரேலியா ஏ அணி வெற்றி பெற்றது. இதனால், 2வது போட்டியில் வெற்றி பெறும் முனைப்புடன் இந்தியா ஏ அணி களமிறங்கி உள்ளது.

# சிறந்த மகளிர் அணிக்கு எதிராக விளையாடுகிறோம்: வங்காளதேச பயிற்சியாளர்




வங்காளதேச மகளிர் அணியின் புதிதாக நியமிக்கப்பட்ட தலைமைப் பயிற்சியாளரான டேவிட் ஹெம்ப், ஆஸ்திரேலியாவிலிருந்து தாயகம் திரும்பும்போது, தங்களது இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை என்ற வருத்தம் அணிக்கு இருக்கக் கூடாது என்று தெரிவித்துள்ளார் 55 வயதான ஹெம்ப், வங்காளதேச மகளிர் அணியின் பயிற்சியாளராகத் தனது இரண்டு ஆண்டு காலப் பணியை, ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருடன் தொடங்குகிறார். இந்தத் தொடரின் முதல் போட்டி இன்று பிரிஸ்பேனில் உள்ள ஆலன் பார்டர் மைதானத்தில் நடைபெறுகிறது. தொடக்கப் போட்டிக்கு முன்னதாகப் பேசிய ஹெம்ப், "உலகின் சிறந்த மகளிர் அணிக்கு எதிராக விளையாடுகிறோம் என்பதை நாம் மறைக்க முடியாது. ஒருநாள் மற்றும் டி20 போட்டிகள் என இரண்டிலும் ஆஸ்திரேலிய அணி முதலிடத்தில் உள்ளது. எனவே, அந்தச் சவாலை எதிர்கொள்வதே மிகப்பெரிய சவாலாக இருக்கும். அந்த அணியில் சிறந்த வீராங்கனைகள் உள்ளனர். "ஆனால், நாங்கள் எவ்வாறு விளையாட வேண்டும் என்பது குறித்த எனது எதிர்பார்ப்பு, ஆட்டம் முழுவதும் நேர்மறையான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதுதான். "ஒரு வாரத்திற்குப் பிறகு , 'இப்படி விளையாடியிருக்கலாம், அப்படி விளையாடியிருக்கலாம்' என்று வருத்தப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் செய்யும் ஒவ்வொரு செயலிலும் நேர்மறையான அணுகுமுறையுடன் இருக்க வேண்டும். களத்தில் விளையாடுவது மட்டுமல்லாமல், ஆட்டத்தை அணுகும் விதத்திலும், அதைப் பற்றி நாம் சிந்திக்கும் முறையிலும் நேர்மறையாக இருக்க வேண்டும். அப்படிச் செய்தால், நாங்கள் சரியான திசையில் முன்னேற முடியும்," என்று அவர் கூறினார்.

# சீன ஓபன் டென்னிஸ்: மிரா ஆன்ட்ரீவா அரையிறுதிக்கு முன்னேற்றம்



சீன ஓபன் டென்னிஸ் போட்டி பீஜிங் நகரில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த கால்இறுதி ஆட்டத்தில் செக்குடியரசின் நிகோலா பார்துன்கோவா 63, 60 என்ற நேர் செட்டில் சக நாட்டவரான கரோலினா முச்சோவாவை தோற்கடித்து அரைஇறுதிக்குள் நுழைந்தார்.

மற்றொரு ஆட்டத்தில் பிரெஞ்சு ஓபன் சாம்பி யனான ரஷியாவின் மிரா ஆன்ட்ரீவா 76 (74), 76 (73) என்ற நேர் செட்டில் சக நாட்டவரான எகதெரினா அலெக் சாண்ட்ரோவாவை சாய்த்தார். அவர் அரைஇறுதியில் பார்துன்கோவாவை சந்திக்கிறார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.